THIRU R. PONNAPPA NADAR: Another matter arising is this. One hon. Member has said that another hon. Member is misleading the House. Is it a parliamentary expression? That is a matter on which you will have to give your ruling. I think that expression should be deleted from the proceedings.

THIRU M. A. LATHEEF: Allegations had been made against the Chair itself. We cannot allow that.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கொஞ்சம் பொறுமையாக இருங்கள். இதிலே ஈடுபட்டவர்கள் எல்லாம் வழக்கறிஞர்கள்; அதனாலே தான் இவ்வளவு பெரிய விவாதம்.

(6) அறிக்கை அளித்தல்

தமிழ்நாடு மின் வாரியத்தின் கணக்குகளின் தணிக்கை அறிக்கை மீதான
பொதுக் கணக்காய்வுக் குழுவின் 5-வது அறிக்கை

திரு. மணலி சி. கந்தசாமி அவர்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1966-67, 1967-68, 1968-69 ஆம் ஆண்டுகளுக்குரிய கணக்குகளின் தணிக்கை அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் ஐந்தாவது அறிக்கையை அளிப்பார்.

THIRU MANALI C. KANDASAMI: Sir, I present the fifth report of the Committee on Public Accounts on the audit report on the accounts of the Tamil Nadu Electricity Board for the years 1966–67, 1967–68 and 1968–69.

(7) 1973–74-ம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது விவாதம் தொடரும். இப்பொழுது கூட திரு. கணபதி அவர்கள் தன்னுடைய வருத்தத்தை தெரிவித்தார்கள். பேச நேரம் கொடுக்கவில்லை என்று சொல்லி. அதைப் போலவே எதிர்க்கட்சியிலே இருப்பவர்களும் நேரம் போதவில்லை என்கிறார்கள். ஒவ்வொரு நாளும் 10 பேருக்கு மேல் பேச வேண்டியிருக்கிறது. எனவே, பேசுகின்றவர்கள் குறிப்பாக எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் 10 நிமிடத்திற்கு மேற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.